**திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பித்தவர் திரு.க.அன்பழகன்;B.Com.,**

ந.க. அ3-4628-2018 நாள் 28.12.2018

---

பொருள் : கிராம நிர்வாகம் - திருவெறும்பூர் வட்டம் - எல்லக்குடி-அகரம் கிராமம் - கிராம நிர்வாக அலுவலர் திரு. சா.சிவப்பிரகாசம் என்பவர் 06.05.2018 பிற்பகல் தகுதி காண் பருவம் முடித்தது — ஆணையிடல்.

படிக்க :
1. திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் செயல்முறைகள் ந.க.அ3-1337-2015
2. திருவெறும்பூர் வட்டாட்சியரின் கடித எண் ந.க.அ6-164-2018 நாள் : 13.12.2018.

---------

ஆணை:

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் வட்டம்,குண்டூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக 02.05.2015 முற்பகல் பணியில் சேர்ந்து, பணியிட மாறுதலில் தற்போது எல்லக்குடி-அகரம் கிராமத்தில் திரு.சா.சிவப்பிரகாசம் என்பவர் கிராம நிர்வாக அலுவலராக 31.08.2018பிற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் பெற்றவர் என்றும், மேலும் 02.05.2015 முற்பகல் முதல் 06.05.2018 முடிய மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடித்துள்ளார் எனவும், மேற்படி காலத்தில் பணி முறிவு மற்றும் தண்டனை ஏதுமின்றி திருப்திகரமாக முடித்துள்ளார் என பார்வை 2-ல் காணும் கடிதத்தில் திருவெறும்பூர் வட்டாட்சியர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

**தனியரின் விவரங்கள் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| 1. | கிராம நிர்வாக அலுவலரின் பெயர் | சா. சிவப்பிரகாசம் |
| 2. | பிறந்த தேதி | 27.06.1978 |
| 3. | பணியில் சேர்ந்த நாள் | 02.05.2015 முற்பகல் |
| 4. | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் | 02.05.2015 |
| 5. | நில அளவை பயிற்சி | 22.05.2017 முதல் 20.06.2017 வரை ஸ்ரீரங்கம் வட்டம் சோமரசம்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நில அளவைப்பயிற்சி 30 நாட்கள் தேர்ச்சி |
| 6. | கிராம நிர்வாக பயிற்சி | 26.03.2018 முதல் 06.05.2018 வரை 42 நாட்கள் ஸ்ரீரங்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ___ தேர்ச்சி |
| 7. | துறைத்தேர்வுகள் தேர்ச்சி | 1.கிராம நிர்வாக அலுவலரின் அதிகாரங்களும், கடமைகளும்,<br>2.கிராமக்கணக்குகள் நடைமுறைகள்<br>3. கிராம சுகாதாரம் |

Scanned with OKEN Scanner

எனவே, திருவெறும்பூர் வருவாய் வட்டாட்சியரின் பரிந்துரையின்பேரில் எல்லக்குடி-அகரம் கிராம நிர்வாக அலுவலர் திரு.சா.சிவப்பிரகாசம் என்பவர் 06.05.2018 பிற்பகல் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மனநிறைவிற்கேற்ப முடித்துள்ளார் என இதன்மூலம் விளம்பி ஆணையிடப்படுகிறது.

வருவாய் கோட்டாட்சியர்
திருச்சிராப்பள்ளி.

பெறுநர் :
திரு.சா.சிவப்பிரகாசம்,
கிராம நிர்வாக அலுவலர்,
எல்லக்குடி-அகரம் கிராமம்,
திருவெறும்பூர் வட்டம்,
(வட்டாட்சியர் மூலமாக)

28/12/18

நகல்:
வட்டாட்சியர், திருவெறும்பூர்
(தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் ஏற்படுத்தி
அதன் விவரத்தை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது)

நகல்:
மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி.
அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner